தெலுங்குதேசம் கட்சியின்

தேசிய செயல்தலைவராக நாரா லோகேஷ் நியமனம்

அமராவதி, ஏப்.16: தெலுங்கு தேசம் கட்சியின் தேசிய செயல் தலைவராக நாரா லோகேஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆந்திராவில் ஆளும் கட்சியான தெலுங்குதேசம் கட்சியின் தலைவராக முதல்வர் சந்திரபாபுநாயுடு உள்ளார். இந்த நிலையில் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சரும், முதல்வர் சந்திரபாபுநாயுடுவின் மகனுமான நாரா லோகேஷ் நேற்று தெலுங்கு தேசம் கட்சியின் தேசிய செயல் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் நந்தியால் தொகுதி எம்பி பி. சபரி, கட்சியின் முதல் பெண் தேசிய பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும், காஜுவாக்கா தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பி. சீனிவாச ராவ் மீண்டும் ஆந்திர மாநிலத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ராஜேஷ் கிலாரு மற்றும் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் கே. ராம் மோகன் நாயுடு ஆகியோரும் தேசிய பொதுச் செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

திருப்பதி ஏழுமலையான் கோயிலில்

கோடை விடுமுறையையொட்டி விஐபி, சர்வதரிசன டிக்கெட் ரத்து?

தேவஸ்தானம் தீவிர ஆலோசனை

திருமலை, ஏப்.16: திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா, தமிழ்நாடு, கேரளா உள்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய வருகின்றனர். இந்நிலையில் தற்போது பள்ளி, கல்லூரிகளுக்கு விரைவில் கோடை விடுமுறை அளிக்கப்பட உள்ளது. இதனால் திருப்பதி கோயிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்பதால் விரைவாக தரிசனம் செய்ய தேவஸ்தானம் மாற்று ஏற்பாடுகளை செய்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக இலவச தரிசனத்தில் வரும் பக்தர்களுக்கு அதிக முன்னுரிமை வழங்கும் வகையில் கோடை காலத்தில் விஐபி தரிசனங்களை ரத்து செய்ய தேவஸ்தானம் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் ஒரு நாளைக்கு 80,000 பேர் தரிசனம் செய்ய முடியும் என தேவஸ்தானம் கருதுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

ஆம் ஆத்மி எம்பி ராகவ் சதாவுக்கு இசட் பிரிவு பாதுகாப்பு

ஒன்றிய அரசு உத்தரவு

புதுடெல்லி, ஏப்.16: மாநிலங்களவை ஆம்ஆத்மி துணை தலைவராக இருந்த ராகவ் சதாவை அந்த பதவியில் இருந்து ஆம் ஆத்மி சமீபத்தில் நீக்கியது. ராகவ் சதாவுக்கு பதில் அசோக் மிட்டல் என்பவரை புதிய துணை தலைவராக ஆம் ஆத்மி நியமித்துள்ளது.

பஞ்சாப் மாநில பிரச்னைகளை அவர் நாடாளுமன்றத்தில் எழுப்பவில்லை என்றும் அவையில் பாஜ அரசுக்கு எதிராக மென்மையான அணுகுமுறையை கடைபிடித்தார். அவையில் இருந்து வெளிநடப்பு போன்றவற்றில் பங்கேற்காமல் அவர் தவிர்த்து வந்தார் என ஆம் ஆத்மி தலைவர்கள் குற்றம் சாட்டினர். இந்த பதவி நீக்கத்தை அடுத்து அவருக்கு வழங்கப்பட்ட இசட் பிளஸ் பாதுகாப்பை பஞ்சாப் அரசு திடீரென விலக்கி கொண்டது. இந்த நிலையில், ராகவ் சதாவுக்கு இசட் பிரிவு பாதுகாப்பு வழங்கப்படும் என ஒன்றிய அரசு அறிவித்துள்ளது.

▶ பீகாரின் பாஜ முதல்வராக பதவியேற்ற சாம்ராட் சவுத்ரிக்கு ஆளுநர் லெப்.ஜெனரல் சையத் அட்டா ஹஸ்னைன் வாழ்த்து தெரிவிக்கிறார்.

தொகுதி மறுவரையறை மூலம்

ஓபிசி பிரிவு உரிமைகளை பிரதமர் மோடி திருடுகிறார்

ராகுல்காந்தி குற்றச்சாட்டு

புதுடெல்லி, ஏப். 16: தொகுதி வரையறை மூலம் ஓபிசி பிரிவு உரிமைகளை பிரதமர் மோடி திருடுவதாக ராகுல்காந்தி குற்றம் சாட்டி உள்ளார்.

இது தொடர்பாக மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி வெளியிட்டுள்ள வீடியோ செய்தி:

தற்போது ஒரு மாபெரும் நேர்மையற்ற செயல் அரங்கேற்றப்பட்டு வருகிறது. சாதி கணக்கெடுப்பின் அடிப்படையிலோ அல்லது வரவிருக்கும் மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையிலோ பெண்களுக்கான இட ஒதுக்கீடு தொடர்பான முடிவு எடுக்கப்படுவதை பிரதமர் மோடி விரும்பவில்லை. பிரதமர், உங்களின் (ஓபிசி-இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின்) உரிமையான பங்களிப்புப் பங்கைப் பறிக்கிறார். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் குறித்த குறிப்பிட்ட புள்ளிவிவரங்கள் இல்லாத 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்புத் தரவுகளைப் பயன்படுத்த அவர் வலியுறுத்துகிறார். ஏனெனில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பங்கைப் பறிக்கும் நோக்கத்தில் தான் அவர் இருக்கிறார். மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடந்து கொண்டிருக்கிறது; நாடாளுமன்றத்தில் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை அமல்படுத்த, உங்களால் ஏன் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் தரவுகளைப் பயன்படுத்த முடியாது?

சாதி கணக்கெடுப்பு தொடர்பான தரவுகள் வெளிவருவதால் பிரதமர் மோடியும், ஆர்.எஸ்.எஸ் மற்றும் பாஜ உறுப்பினர்களும் கலக்கமடைந்துள்ளனர். உங்கள் மக்கள்தொகைக்கு விகிதாசாரமான பங்கை நீங்கள் பெறுவதை அவர்கள் விரும்பவில்லை. இது பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு எதிரானது மட்டுமல்ல, ஒரு தேசவிரோதச் செயலாகும்.

மக்கள் தொகையில் 50 சதவீதம் பேர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர். எனவே அவர்களின் பங்களிப்பைப் பறிக்க மோடி விரும்புகிறார். மோடி விரும்புவது நடந்தால், சிறிய மாநிலங்கள், தென் மாநிலங்கள் மற்றும் வடகிழக்கு மாநிலங்கள் கணிசமாகப் பாதிக்கப்படும், மேலும் அவற்றின் பிரதிநிதித்துவம் குறையும். இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மக்கள் தொகை குறித்த தரவுகள் இல்லாத 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பை விட, 2026ல் திட்டமிடப்பட்டுள்ள மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் நீங்கள் (பிரதமர்) இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதே எங்கள் நிலைப்பாடு. நீங்கள் உண்மையிலேயே மகளிர் இட ஒதுக்கீடு சட்டத்தை செயல்படுத்த விரும்பினால், அதற்கான விதிமுறை ஏற்கனவே அரசியலமைப்பில் உள்ளது; அதைச் செயல்படுத்துங்கள். நாங்கள் எங்கள் முழு ஆதரவையும் வழங்குவோம். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறிய மாநிலங்களின் நலன்களுக்கு எதிரான எந்தவொரு நடவடிக்கையையும் எதிர்க்கட்சிகள் அனுமதிக்காது. இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நிதிஷ்குமார் பதவி விலகியதைத் தொடர்ந்து

பீகாரின் புதிய பாஜ முதல்வராக சாம்ராட் சவுத்ரி பதவியேற்றார்

ஜேடியுவை சேர்ந்த 2 பேர் துணை முதல்வர்கள்

பாட்னா, ஏப். 16: கடந்த 2025 சட்டப்பேரவை தேர்தலில் ஜேடியு-பாஜ இணைந்த என்டிஏ கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைத்த நிலையில், 5 மாதத்தில் நிதிஷ்குமார் முதல்வர் பதவியிலிருந்து விலகி உள்ளார். கடந்த 10ம் தேதி அவர் மாநிலங்களவை எம்பியாக பதவியேற்றதைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் முதல்வர் பதவியிலிருந்து விலகி, சட்டப்பேரவையை கலைத்தார். இதைத் தொடர்ந்து, பாஜ சட்டப்பேரவை கட்சி தலைவராக முன்னாள் துணை முதல்வர் சாம்ராட் சவுத்ரி தேர்வு செய்யப்பட்டார். அவரது தலைமையில் புதிய ஆட்சி அமைக்க ஆளுநரிடம் உரிமை கோரப்பட்டது.

இந்நிலையில், பீகாரில் முதல் முறையாக பாஜ தலைமையில் புதிய அரசு பதவியேற்கும் நிகழ்ச்சி லோக் பவனில் நேற்று நடந்தது. இதில், புதிய முதல்வராக சாம்ராட் சவுத்ரிக்கு ஆளுநர் லெப்டினன்ட் ஜெனரல் சையத் அட்டா ஹஸ்னைன் பதவிப் பிரமாணமும் ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார். சாம்ராட்டுடன், ஜேடியு கட்சியை சேர்ந்த விஜய்குமார் சவுத்ரி, பிஜேந்திர யாதவ் ஆகியோர் அமைச்சர்களாக பொறுப்பேற்றனர். இவர்கள் இருவரும் நிதிஷ்குமாருக்கு மிகவும் நெருக்கமானவர்கள். இருவரும் துணை முதல்வர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதனால், புதிய அமைச்சரவையில் ஜேடியு உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளுக்கு அதிக இடம் அளிக்கப்பட்டு விரைவில் அமைச்சரவை விரிவுபடுத்தப்படும் என கூட்டணிக் கட்சிகள் எதிர்பார்த்துள்ளன. பதவியேற்பு விழாவில் ஒன்றிய அமைச்சர்கள் ஜே.பி.நட்டா, சிராக் பஸ்வான், ஜேடியு தலைவர் நிதிஷ்குமார் மற்றும் எம்எல்ஏக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். கடந்த 2017ல் பாஜவில் இணைந்த சாம்ராட் சவுத்ரி, முந்தைய நிதிஷ் ஆட்சியில் துணை முதல்வராகவும், மாநில உள்துறை அமைச்சராகவும் பதவி வகித்தவர். 1952ல் முதல் தேர்தலை சந்தித்ததில் இருந்து பீகாரில் பாஜவை சேர்ந்த ஒருவர் முதல்வராக பதவியேற்பது இதுவே முதல்முறை. இவர் பீகாரின் 24வது முதல்வராவார். பதவியேற்ற பின் செய்தியாளர்களை சந்தித்த முதல்வர் சாம்ராட் சவுத்ரி, ''இன்றிலிருந்தே நான் பணியை தொடங்குகிறேன். பிரதமர் மோடியும், முன்னாள் முதல்வர் நிதிஷ் குமாரும் இணைந்து உருவாக்கிய ஆட்சி முறைதான் பீகாரில் பின்பற்றப்படும் என்பதில் நீங்கள் உறுதியாக இருக்கலாம்'' என்றார். பின்னர் உடனடியாக தலைமைச் செயலகத்திற்கு சென்ற முதல்வர் சாம்ராட் சவுத்ரி அதிகாரிகளை சந்தித்து தனது பணியை தொடங்கினார்.

பிரதமர் மோடி வாழ்த்து

பிரதமர் மோடி எக்ஸ் தளத்தில் விடுத்த வாழ்த்து செய்தியில், "பீகார் மாநிலத்தின் முதல்வராக பதவியேற்ற சாம்ராட் சவுத்ரிக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துகள். அவரது ஆற்றல், மக்கள் சேவை மீதான அர்ப்பணிப்பு மற்றும் அடித்தள அளவிலான அனுபவம் ஆகியவை பீகாருக்கு பெரிதும் பயனளிக்கும். அவரது திறமையான தலைமையின் கீழ், மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்து, பீகார் மாநிலம் அனைத்துத் துறைகளிலும் புதிய வளர்ச்சி சிகரங்களை எட்டும் என்பதில் முழு நம்பிக்கை கொண்டுள்ளேன்" என கூறி உள்ளார்.

இந்தியா - அமெரிக்கா வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை

இந்திய அதிகாரிகள் குழு அடுத்த வாரம் வாஷிங்டன் பயணம்

புதுடெல்லி, ஏப்.16: இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் நீண்ட இழுபறிக்கு பின் முடிவானது. இந்த ஒப்பந்தம் தொடர்பான முக்கிய அம்சங்கள் அடங்கிய ஆவணம் கடந்த பிப்ரவரி 9ம் தேதி வெளியானது. பின்னர் இதில் சில மாற்றங்களை செய்து உண்மைத் தாள் என்ற பெயரில் புதிய அறிக்கையை வெள்ளை மாளிகை வெளியிட்டது. இதைத்தொடர்ந்து கடந்த மார்ச் மாதம் இந்தியா அமெரிக்கா இடையே இறுதி வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அதிபர் டிரம்ப் விதித்த வரிகளை ரத்து செய்து அமெரிக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டதால், ஒப்பந்தம் கையெழுத்தாவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தியா, அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் குறித்து மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த இந்திய அதிகாரிகள் குழுவினர் அடுத்த வாரம் வாஷிங்டன் செல்ல உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. ஆனால் இந்த குழுவில் யார், யார் இடம்பெறுவார்கள் என்பது தெரியவில்லை.

GRIHUM

க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், பி-பில்டிங், கங்கா ட்ரூனோ பிசினஸ் பார்க், லோஹேகான், புனே–411014. கிளை அலகு: 2ஆவது தளம், தி ஓவல், வெங்கட்நாராயணா சாலை, தி.நகர், சென்னை, தமிழ்நாடு: 600017

ஏல அறிவிப்பில் திருத்தம்

இந்தச் செய்தித்தாளில் **03.04.2026** தேதியன்று வெளியிடப்பட்ட **திரு. N.ரவிச்சந்திரன்** என்ற பெயருள்ள கடன்தாரரின் **கடன் எண். HM0028H18100049** –உடன் தொடர்புடைய மின்–ஏல விற்பனை அறிவிப்பில் பத்தி (C)–இல் உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சுவாதீனத் தன்மை **அடையாளப்பூர்வ சுவாதீனம்** என்று திருத்தப்பட வேண்டும்.

மற்ற அனைத்து உள்ளடக்கங்களும் அப்படியே இருக்கும்.

தேதி: 16.04.2026 ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி,
இடம்: சென்னை க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

அரசியலமைப்பு சட்டம் வழங்கியுள்ள வாழ்வுரிமையின் ஒரு பகுதி

மாதவிடாய் விடுப்பு அடிப்படை உரிமை

கர்நாடக ஐகோர்ட் அதிரடி

பெங்களூரு, ஏப். 16: மாதவிடாய் விடுப்பு என்பது அடிப்படை உரிமை என்றும், அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள வாழ்வுரிமையின் ஒரு பகுதி என்றும் கர்நாடக உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கர்நாடக மாநில அரசு பெண் ஊழியர்களின் உடல்நலனை கருத்தில் கொண்டு, மாதத்தில் ஒரு நாள் ஊதியத்துடன் கூடிய விடுப்பு அறிவித்தது. பெண்களுக்கான மாதவிடாய் விடுப்பை ரத்து செய்யக் கோரி பெண்களே கர்நாடக உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்திருந்தனர்.

மாநில அரசின் இந்த உத்தரவு, அரசியலமைப்பு சட்டம் வழங்கியுள்ள சமத்துவ உரிமைக்கு எதிரானது என்றும், இந்த உத்தரவால் பெண் ஊழியர்களை பணியமர்த்த நிறுவனங்கள் தயங்குவதாகவும் அந்த மனுவில் குறிப்பிட்டிருந்தனர். மேலும், இந்த கொள்கையை வகுக்கும் போது பெண்களின் கருத்துகளைக் கருத்தில் கொள்ள அரசு தவறிவிட்டது என்றும், போட்டி நிறைந்த தொழில் வாழ்க்கையில் இந்த உத்தரவு பெண்களுக்கு பாதகமாக அமையும் என்பதால், மாதவிடாய் விடுப்பு உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று அந்த மனுவில் தெரிவித்திருந்தனர்.

அந்த மனுவை விசாரித்த கர்நாடக உயர்நீதிமன்றம், மாதவிடாய் விடுமுறை என்பது அடிப்படை உரிமை. மாதவிடாய் விடுமுறை பெறுவது அரசியலமைப்பு சட்டம் வழங்கியுள்ள வாழ்வுரிமையின் ஒரு பகுதி. ஆணும் பெண்ணும் சட்டத்தின் முன் சமம் என்றாலும், பெண்கள் உயிரியல் ரீதியாக வேறுபட்டவர்கள். அதை அங்கீகரிப்பதே சமத்துவத்திற்கு முழுமையான அர்த்தத்தைத் தரும் என்று உத்தரவிட்டது.

தைரியம் இருந்தா என் காரை தினமும் சோதனை செய்யுங்க

மத்திய பாதுகாப்பு படைக்கு மம்தா பானர்ஜி சவால்

இஸ்லாம்பூர், ஏப்.16: "தைரியம் இருந்தால் எனது காரை தினமும் சோதனை செய்யுங்கள்" என மத்திய பாதுகாப்பு படையினருக்கு மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி சவால் விடுத்துள்ளார்.

மேற்குவங்கத்தில் விரைவில் முதற்கட்ட பேரவை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியும், பாஜவும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளன. இங்கு ஏற்கனவே வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த நடவடிக்கை போன்ற விவகாரங்களில் திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜிக்கும், ஒன்றிய பாஜ அரசுக்கும் இடையே மோதல் போக்கு நீடித்து வருகிறது.

இந்நிலையில் தேர்தல் ஆணையத்தின் உத்தரவுப் படி, திரிணாமுல் காங்கிரஸ் கட்சி தலைவரும், முதல்வர் மம்தா பானர்ஜியின் உறவினருமான அபிஷேக் பானர்ஜி உள்பட அக்கட்சியின் வாகனங்களை மட்டுமே குறிவைத்து மத்திய படையினர் சோதனை நடத்துவதாக மம்தா பானர்ஜி குற்றம் சாட்டி உள்ளார். மம்தா பானர்ஜி கொல்கத்தா விமான நிலையம் சென்ற போது அவரது காரை மத்திய பாதுகாப்பு படையினர் சோதனையிட்டதாக குற்றம்சாட்டி உள்ளார்.

உத்தர தினாஜ்பூர் மாவட்டம் இஸ்லாம்பூரில் நேற்று நடந்த பிரசார கூட்டத்தில் பேசிய மம்தா பானர்ஜி, "பிரசாரத்துக்கு செல்ல கொல்கத்தா விமான நிலையம் சென்ற போது எனது காரை மத்திய பாதுகாப்பு படையினர் தடுத்து நிறுத்தி சோதனையிட்டனர்" என தெரிவித்ததுடன், "உங்களுக்கு தைரியம் இருந்தால் தினமும் எனது காரை சோதனை செய்யுங்கள்" என ஆவேசமாக சவால் விடுத்தார்.

HeroHousing Finance

ஹீரோ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

தொடர்பு முகவரி: A-6, மூன்றாவது தளம், செக்டார்-4, நொய்டா-201301.
பதிவு அலுவலகம்: 09, சமுதாய மையம், பசந்த் லேக், வசந்த் விஹார், புதுடெல்லி-110057
தொலைபேசி: 01149267000, கட்டணமில்லா எண்: 1800 212 8800, மின்னஞ்சல்: customer.care@herohfl.com
இணையதளம்: www.herohousingfinance.com | CIN: U65192DL2016PLC30148

திருத்தம்

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 ("விதிகள்") இன் விதி 3 உடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 ("சட்டம்") இன் பிரிவு 13(2) கீழ் கடன் கணக்கு எண்கள். HHFCHNHOU24000049259, HHFCHNLAP24000049263 கொண்ட, கடன்தாரர்களான பார்வதி தேவி ஜெயக்குமார் (மறைந்த ஜெயக்குமார் S அவர்களின் மனைவி மற்றும் சட்டப்பூர்வ வாரிசு), J டார்வின் சங்கர் (மறைந்த ஜெயக்குமார் S அவர்களின் மகன் மற்றும் சட்டப்பூர்வ வாரிசு), கீர்த்தனா முத்துமாலை (மறைந்த ஜெயக்குமார் S அவர்களின் மகள் மற்றும் சட்டப்பூர்வ வாரிசு) ஆகியோருக்குச் சொந்தமான சொத்து தொடர்பாக 14–04–2026 அன்று பிசினஸ் ஸ்டாண்டர்ட்–சென்னை மற்றும் தினகரன்–காஞ்சிபுரம் நாளிதழ்களில் வெளியிடப்பட்ட கோரிக்கை அறிவிப்பில் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ள செயல்படா சொத்து நாள் 06–03–2026 என்பதற்குப் பதிலாக செயல்படா சொத்து நாள் 06–03–2025 என்று படிக்கப்பட வேண்டும். மேலும் வ.எண்.2 இல் கடன் கணக்கு எண்கள். HHFCHNHOU24000049298, HHFCHNLAP24000049301 கொண்ட, கடன்தாரர்களான பார்வதி தேவி ஜெயக்குமார் (மறைந்த ஜெயக்குமார் S அவர்களின் மனைவி மற்றும் சட்டப்பூர்வ வாரிசு), J டார்வின் சங்கர் (மறைந்த ஜெயக்குமார் S அவர்களின் மகன் மற்றும் சட்டப்பூர்வ வாரிசு), கீர்த்தனா முத்துமாலை (மறைந்த ஜெயக்குமார் S அவர்களின் மகள் மற்றும் சட்டப்பூர்வ வாரிசு) ஆகியோருக்குச் சொந்தமான சொத்து தொடர்பாக வெளியிடப்பட்ட கோரிக்கை அறிவிப்பில் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ள செயல்படா சொத்து நாள் 06–03–2026 என்பதற்குப் பதிலாக செயல்படா சொத்து நாள் 06–03–2025 என்று படிக்கப்பட வேண்டும். மேலும் வ.எண்.3 இல் கடன் கணக்கு எண். HHFCHNLAP24000049223– ஐ கொண்ட, பார்வதி தேவி ஜெயக்குமார் (காலஞ்சென்ற ஜெயக்குமார் S அவர்களின் மனைவி & சட்டப்பூர்வ வாரிசு), J டார்வின் சங்கர் (காலஞ்சென்ற ஜெயக்குமார் S அவர்களின் மகன் & சட்டப்பூர்வ வாரிசு), கீர்த்தனா முத்துமாலை (காலஞ்சென்ற ஜெயக்குமார் S அவர்களின் மகள் & சட்டப்பூர்வ வாரிசு), சங்கரபலம் (காலஞ்சென்ற ஜெயக்குமார் S அவர்களின் தந்தை & சட்டப்பூர்வ வாரிசு), முத்துமாலை (காலஞ்சென்ற ஜெயக்குமார் S அவர்களின் தாயார் & சட்டப்பூர்வ வாரிசு) ஆகியோருக்குச் சொந்தமான சொத்து தொடர்பாக வெளியிடப்பட்ட கோரிக்கை அறிவிப்பில் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ள செயல்படா சொத்து நாள் 06–03–2026 என்பதற்குப் பதிலாக செயல்படா சொத்து நாள் 06–03–2025 என்று படிக்கப்பட வேண்டும். இந்த கவனக்குறைவான தற்செயலான பிழைக்கு உளப்பூர்வமாக வருந்துகிறோம்.

நாள்: 16.04.2026 ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி,
இடம்: காஞ்சிபுரம் ஹீரோ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்காக

ஆம் ஆத்மி எம்பி வீட்டில்

அமலாக்கத்துறை அதிரடி சோதனை

புதுடெல்லி, ஏப்.16: ஆம் ஆத்மி எம்பி அசோக்குமார் மிட்டலின் வீட்டில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினார்கள்.

ஆம் ஆத்மியின் மாநிலங்களவை எம்பியான அசோக் குமார் மிட்டல் சமீபத்தில் கட்சியின் துணை தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் பஞ்சாப் மாநிலம் பக்வாராவில் உள்ள லவ்லி புரொபஷனல் பல்கலைக்கழகத்தின் வேந்தராக உள்ளார். இந்நிலையில் அசோக்குமார் மிட்டலுக்கு சொந்தமான வணிக வளாகம் மற்றும் குடியிருப்பு வளாகங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் நேற்று சோதனை நடத்தினார்கள். அந்நியச் செலாவணி மேலாண்மை சட்டத்தின் கீழ் மிட்டலுக்கு எதிராக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஜலந்தர் மற்றும் குருகிராமில் உள்ள சுமார் 10இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டனர்.



பஞ்சாப் தேர்தல் ஏற்பாடுகள் தயார்

எம்பி அசோக் மிட்டல் வீட்டில் அமலாக்கத்துறை சோதனை தொடர்பாக ஆத் ஆத்மியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் தனது எக்ஸ் தள பதிவில், "பஞ்சாபில் தேர்தலுக்கான ஏற்பாடுகளை மோடி தொடங்கிவிட்டார். ஆனால் பஞ்சாப் மக்கள் இதனை சகித்துக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் பாஜவுக்கு தகுந்த பதிலடி கொடுப்பார்கள்" என்று தெரிவித்துள்ளார்.

புதிய மசோதாக்களுக்கு ஒய்எஸ்ஆர் காங். ஆதரவு

திருமலை, ஏப்.16: ஒன்றிய அரசின் புதிய மசோதாக்களுக்கு ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது.

மகளிர் இடஒதுக்கீடு மற்றும் தொகுதி வரையறை மசோதா தொடர்பாக ஒன்றிய அரசு சிறப்பு நாடாளுமன்ற கூட்டத்தொடர்களை கூட்டியுள்ளது. காங்கிரஸ், திமுக, திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்டவை கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இந்நிலையில் ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சியின் நிறுவனரும், ஆந்திர முன்னாள் முதல்வருமான ஜெகன் மோகன் தனது நிலைப்பாட்டை நேற்றிரவு அறிவித்தார். அதில், ஒன்றிய அரசின் மகளிர் இடஒதுக்கீடு மற்றும் தொகுதி வரையறை மசோதாக்களுக்கு ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் முழு ஆதரவளிக்கும் என தெரிவித்துள்ளார்.

OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிட்.

CIN: U67100TZ2014PTC020363
கார்ப்பரேட் அலுவலகம்: கோஹினூர் ஸ்கொயர், 47வது தளம், N.C. கேல்கர்மார்க் R.G.கட்காரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை-400028.
பதிவு அலுவலக முகவரி: எண்.9, எம்.பி. நகர், முதல் தெரு, கொங்கு நகர் விரிவாக்கம், திருப்பூர்-641607
மின்னஞ்சல்:vm.divakaran@omkaraarc.com,
அதிகாரபூர்வ அதிகாரி: கைபேசி எண்.: +91 9344684194/ 9884062068/ 99623 33307.

[பிற்சேர்க்கை-IV-A] [விதி 8(6) r/w 9(1) விதிகளை காணவும்]
அசையா சொத்து மின்-ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) r/w 9(1) விதிகளுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 ("சர்பாசி சட்டம்") கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் இதன்கீழ் பெயரிடப்பட்ட கீழ்க்குறிப்பிட்ட கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) & அடமானதாரர்கள் ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள் கடனீட்டு கடனீந்தோருக்கு அடமானம் / உரிமை அளிக்கப்பட்டது, அது ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்., (OARPL), மேலும் கீழே உள்ள கணக்குகளின் முழு நிலுவையில் உள்ள கடன்களையும் ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட் (OARPL) (ஓம்காரா PS 33/2020–21 ஒப்பந்தங்கள் மூலம் பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படும்) M/s. எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (உரிமையீந்தோர்) வசமிருந்து 30.03.2021 தேதியிட்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தம் மூலம் உரிமையீந்தோரிடமிருந்து கீழ்க்காணும் கடனீட்டுடன் கடன்களை கைப்பற்றியுள்ளது. அதற்கிணங்க, ஒஏஆர்பிஎல் உரிமையீந்தோரின் கடமைப் பொறுப்புகளை ஏற்றுள்ளது மேலும் நிலுவைகளை மீட்க மற்றும் கடனீட்டினை அமலாக்கம் செய்ய அதிகாரமளிக்கப் பெற்றுள்ளது. ஒஏஆர்பிஎல் இன் அதிகாரப்பூர்வ அதிகாரி இதன்மூலம் நிலுவைகளை மீட்பதற்காக கீழேக் குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்தினை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளார். கீழ்க்காணும் சம்பந்தப்பட்ட கடன்தாரர்(கள்) மற்றும் உப–கடன்தாரர்(கள்) வசமிருந்து கடனீட்டுக் கடனீந்தோராக ஒஏஆர்பிஎல்–க்குரிய நிலுவை கீழே சம்பந்தப்பட்ட நிரலில் காணும் தொகையை மீட்பதற்காக "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" மற்றும் "முறையீடொரா அடிப்படை"யில் சர்பாசி சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) விதிமுறைகளின் கீழ் உரிமைகள் மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்தி சொத்து விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள், கடனீடுகள், உரிமையாளர், நிலுவைத்தொகைகள், பிரிவு 13(2) கீழ் அனுப்பிய கோரிக்கை அறிவிப்பு நாள், சுவாதீனம் நாள், நிர்ணய விலை, ஏலம் உயர்த்தும் தொகை, முன்வைப்புத்தொகை (EMD), பார்வையிடும் நாள் & நேரம் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு:

கடன்தாரர்கள்& உப கடன்தாரர்களின் பெயர்	திருமதி. திரு. தர்மலிங்கம் D (கடன்தாரர்), திருமதி D. ரேணுகா மற்றும் திரு. D. வல்லரசன் (உப–கடன்தாரர்கள்) மற்றும் திரு. K. மகாதேவன் (ஜாமீன்தாரர்)		
கடனீட்டு சொத்து விவரங்கள்: திரு.D.தர்மலிங்கம் (கடன்தாரர்), த/பெ. திரு.துரைசாமி அவர்களின் சொத்து: கொன்னூர் சார்பதிவு அலுவலகத்தின் 26.03.2014 தேதியிட்ட ஆவண எண்.1462/2014 திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், தற்போது சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் II தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் வரம்புக்குள், முகப்பேர் மேற்கு திட்டம் பகுதியில், முகப்பேர் மேற்கு, சென்னை–600037 இடத்தில் அமைந்துள்ள முகப்பேர் கிராமம், "ஜே.ஜே. நகர்" பிளாக் எண் 3, "A2" வகை, மனை எண். 724 இன் சர்வே எண். 500 பகுதியில் அடங்கிய 390 சதுர அடி பரப்பளவு உள்ள கட்டிடத்துடன் கூடிய சொத்தின் அனைத்து துண்டு மற்றும் பகுதி. மேலும் எல்லைகள்: வடக்கில்: மனை எண் 3/925, தெற்கில்: 16 அடி அகலம் சாலை, கிழக்கில்: மனை எண் 3/723, மேற்கில்: மனை எண் 3/725, அளவீடு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்: 13 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்: 13 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்: 30 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்: 30 அடி, அனைத்து பரப்பளவு 390 சதுர அடி மனை மேலும் தரை தளம் மற்றும் முதல் தளத்தில் அதிலான கட்டிடம் மேலும் சென்னை வடக்கு பதிவு மாவட்டம் மற்றும் கொன்னூர், சென்னை சார் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.			
சொத்தின் உரிமையாளர்: திரு. தர்மலிங்கம் D, த/பெ: திரு.துரைசாமி			
13 (2) கோரிக்கை அறிவிப்பு நாள்: 14.10.2022	சுவாதீன நாள்: 28.02.2026	15.04.2026 தேதியின்படி நிலுவை: ரூ.81,53,619/– (ரூபாய் எண்பத்து ஒரு லட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து அறுநூற்று பத்தொன்பது மட்டும்)	
நிர்ணய விலை: ரூ. 38,00,000/– (ரூபாய் முப்பத்தெட்டு லட்சம் மட்டும்)	முன்வைப்பு தொகை:– நிர்ணய விலையில் 10% ரூ. 3,80,000/– (ரூபாய் மூன்று லட்சத்து எண்பதாயிரம் மட்டும்)	ஏலம் உயர்த்தும் தொகை:– ரூ. 20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்)	சொத்து பார்வையிடல் மற்றும் நேரம்:– மேலே குறிப்பிட்ட அதிகாரப்பூர்வ அதிகாரியின் கைபேசி எண்கள் மூலம் பெறப்பட்ட முன் அனுமதியின்பேரில்
கணக்கு விவரங்கள்:–	கணக்கு எண்:– 344905001015, பயனாளி பெயர்:– ஓம்காரா PS33/2020–21, டிரஸ்ட், வங்கி பெயர்:– ஐசிஐசிஐ வங்கி, பிகேசி, மும்பை, ஐஎப்எஸ்சி குறியீடு: ICIC0003449		
ஏலத்தேதி மற்றும் நேரம்:– 20 மே 2026 (புதன்கிழமை) காலை 11 மணி முதல் நண்பகல் 12 மணி வரை	ஏலத்தில் பங்கேற்பதற்கான கடிதம்/ சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம்/ கேஒய்சி ஆவணம்/முன்வைப்பு தொகைக்கான ஆதார ஆவணம்:– 18 மே 2026 (திங்கள் கிழமை) மாலை 4 மணி அல்லது அதற்கு முன்பாக		

ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: விற்பனை விண்ணப்பத்தின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கடனீட்டு கடனீந்தோரின் (OARPL) இணையதளம் அதாவது http://omkaraarc.com/auction.php அல்லது சேவை வழங்குநரின் இணையதளம் அதாவது http://bankauctions.com –ஐ பார்வையிடவும்

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) கீழ் r/w 9(1) விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு

இந்த அறிவிப்பு மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தாரர்(கள்) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6), r/w 9(1) மற்றும் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிகளின் கீழ், செலவு & செலவினங்களுடன் சேர்த்து இங்கே மேற்குறிப்பிட்டவாறு நிலுவைத்தொகைகளை செலுத்தி, அவர்கள் விரும்பினால் சொத்துகளை மீட்கும் அறிவுறுத்தலுடன் மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் பொது ஏலம் மூலம் விற்பனை நடைபெறுவது குறித்து தகவல் அளிக்கும் 30 (முப்பது) நாட்கள் கட்டாய அறிவிப்பும் ஆகும். பணம் செலுத்தத் தவறினால், நிதிச்சொத்துக்களை மீட்டெடுப்பதற்கான ஆலோசனையுடன் புனரமைத்தல் மற்றும் 16.04.2026 தேதி முதல் கூடுதல் வட்டியுடன் சொத்துகளை மீட்டெடுப்பதற்கான ஆலோசனையுடன் மின்–ஏலத்தின் மூலம் செயல்படுத்தவும் அதிகாரப்பூர்வ அதிகாரி / கடனீட்டு கடனீந்தோரின் தனிவிருப்ப முடிவில் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(5) கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஏதேனும் முறைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

நாள்: 16.04.2026
இடம்: சென்னை

(V.M.திவாகரன்)
கைபேசி எண். 99623 33307
அதிகாரப்பூர்வ அதிகாரி,
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்,
(ஓம்காரா பிஎஸ் 33/2020–21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படுகிறது)